கண் திரையை விலக்கிக் காணட்டும், உலகை!

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (19—11—49) வெளியூர் (20—11—49) [இதழ் 95

முதலாளித்வ || சமதர்ம இரு வேறுலகோர் இங்குள்ளோம்

சோவியத் கண்டு நடுக்கமேன்? மருத்துவர் உதவியை நாடிப்பார்மின்!

கோடானுகோடி மக்கள் கூட்டம் அமைதியை நாடி அணிவகுக்கிறது

(0)

அணுக்குண்டு ஆதிக்கத்துக்கு 'சாவுமணி' கண்டு சஞ்சலமா?

பிரிட்டிஷ் மந்திரி பேயாட்டத்துக்கு சோவியத் மந்திரி ஆப்பு!

"இரு வேறு உலகங்களின் பிரதிநிதிகளாக நாம் இங்கு வீற்றிருக்கிறோம். ஒன்று, முதலாளித்துவ உலகம், மற்றொன்று, சமதர்ம உலகம். வெளிநாடுகளளெல்லாம் இராணுவத் தளங்களை அமைக்க அமெரிக்கா கண்ணுங் கருத்துமாயிருக்கிறது. அட்லாண்டிக் ஒப்பந்தம், சைப்ரஸ், பஸிபிக், ஸ்பெயின் ஆகிய இடங்களில் அமெரிக்கத் தளங்களை நிறுவ பேச்சு வார்த்தைகள், வடதுருவ நடவடிக்கைகள் இன்னபிற அனைத்தும் யாரை வீழ்த்த மேற்கொள்ளப்படுகின்றன?

"சோவியத் யூனியன் அச்சுறுத்தி வருவதாகப் பற்பலர் எடுத்துக் கூறினர். இத்தகைய பீதியில் நீங்கள் மூழ்கியிருந்தால், நடுக்கமும் கலக்கமும் கொண்டிருந்தால், தக்க மருத்துவரொருவரை நாடி ஆய்வுரை கேளுங்கள்; எதற்காக இப்படிப் பயப்படவேண்டும்? கடலைக் கடந்து வந்து சோவியத் யூனியன் அமெரிக்காவைத் தாக்கி விடுமா, என்ன? அத்தகைய படையே எங்களிடம் இல்லையே!

"தோழர் மெக்னெயில் தன் கண்ணை மறைத்திருக்கும் திரையை விலக்கி, உலகில் என்ன நடந்தேறி வருகிறதென்பதை உணரட்டும்! பற்பல நாடுகளிலும் கோடிக்கணக்கான மக்கள் அணி வகுத்துப் புறப்பட்டுவிட்டனர். அவர்கள் நம் நண்பர்கள்—சமாதானப் பிரியர்கள், ஜனநாயகத்தின் தோழர்கள். இதை நீங்கள் காண மறுப்பீரேல், தவறிழைத்தவர்களாவீர்!"

ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அரசியல் கமிட்டியில் சோவியத் ரஷ்யா மீது பிரிட்டிஷ் மந்திரி தோழர் மெக்னெயில் பாடிய 'வசைபுராணத்துக்கு' சோவியத் அயல் நாட்டு மந்திரி எம். ஆண்ட்ரி விஷின்ஸ்கி தந்த ஆப்பின் சிறு பகுதியை மேலே எடுத்துக் காட்டியுள்ளோம்.

கையை முன்னும் பின்னும் ஆட்டி அசைத்துக்கொண்டு, சோவியத் மந்திரி விஷின்ஸ்கி பிரிட்டிஷ் மந்திரி மெக்னெயிலிடம் சொன்னார், 'கண்ணைத் திறந்து உலகில் என்ன நடக்கிறது என்பதைப் பாரும்' என்று.

சமாதான முயற்சிகளுக்கான புதிய திட்டங்கள் பற்றி சோவியத் மந்திரி பேசுகையில், அமெரிக்காவும் பிரிட்டனும் உலகத்தைப் போர்ப் பாதையில் அழைத்துச் செல்கின்றன வென்று குறிப்பிட்டதை மெக்னெயில் ஆட்சேபித்து ஏதேதோ வசைபாடவும், சோவியத் மந்திரி மீண்டும் தனது கூற்றை வலியுறுத்திப் பேசியுள்ளார். ரஷ்யா மீது ஆங்கிலமோ அமெரிக்க நாடுகள் பாய்வதற்குக் காரணம் அணுசக்தி கட்டுப்பாடு திட்டங்களை ரஷ்யா வலியுறுத்தி வருவதாலென்றும் தெளிவு படுத்தினர்.

ஏன் அந்நாடுகள் பாய்கின்றன வென்பதற்கு இன்னும் காரணங்கள் வேண்டுமா? அணுசக்தியின் ஏகபோக ஆதிக்கம் அமெரிக்காவிடமே இது வரை இருந்து வந்தது. அவ்வாதிக்கத்துக்கு இன்றோ நாளையோ சாவுமணி யடிக்கப்பட்டு விடுமென்பது தெளிவாகி விட்டது. சோதிடர்கள் கணித்துக்கொடுத்த காலவரை

[illegible]

நண்பர்கட்கு நற்செய்தி!

கழகத்துக்கு ஆங்கில வார இதழ்

சென்னை, நவ. 18—

"மாலை மணி" வெளியீட்டாளர் தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்கள் இன்று எழும்பூர் பிரதம மாகாண நீதிபதி முன்னிலையில் "Progress" (முன்னேற்றம்) என்னும் ஆங்கில வார இதழின் வெளியீட்டாளராகவும், அச்சாளராகவும் தன்னைப் பதிவுசெய்து கொண்டார்.

"Progress" ஆங்கில வார இதழ் தோழர் சி. என். அண்ணாத்துரையவர்களை ஆசிரியராகக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரப் பூர்வமான பத்திரிகையாக வெளிவரும்.

சென்னை சர்க்கார் நிதி நிலைமை

சென்னை, நவ. 18—

ரிசர்வ் பாங்கி கவர்னர் சர். பெனிகல் ராமராவ் நேற்று பிற்பகலில் நிதி மந்திரி தோழர் பி. கோபால்ரெட்டியை சந்தித்துப் பேசினர். மூலதனச் செலவுகள் சம்பந்தமாக சென்னை சர்க்காருக்குள்ள கஷ்டங்களும், கடன் கோரிக்கைகளெழுப்பும் பிரச்சினைகள் பற்றியும், மற்றும் பலவும் விவாதிக்கப்பட்டதாக அறியப்படுகிறது. பேச்சு வார்த்தை ஒருமணிநேரம் நீடித்ததாகவும், சர். ராமராவ் யோசனைகள் பல கூறினரென்றும் தெரியவருகிறது.

சர்க்கார் அடுத்தாண்டில் கடன் நிதிகள் ஏற்பாடு செய்வதற்கான அறிகுறிகள் பெரிதும் தோப்படுகின்றன வென்றும் காணப்பட்டது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஆண்டவனையும் பாதித்த அதிசயம்!

ஏழுமலையானை ஏழையாக்க 'ஐதராபாத்' துணை செய்த பரிதாபம்!

திருப்பதி தேவஸ்தான கமிஷனரின் 'கண்ணீர்த் துளிகள்!'

"நாடெங்கும் பரந்துகாணப்படும் பொருளாதார நெருக்கடி, திருமலை திருப்பதி தேவஸ்தானங்களின் காணிக்கை, ஆர்ஜிதம் வருமானங்களையும் மறைமுகமாகத் தாக்கி பாதித்து விட்டது. ஐதராபாத்தில் நிலை பெற்றிருந்த குழப்பமும் குளறுபடியுங்கூட, வருமானக்குறைவுக்குக் காரணமாயிருந்திருக்கிறது.

இக் கோயில்களின் வருமானம், காணிக்கைகளும் ஆர்ஜிதங்களுமேயாகையால், அவை குறைந்து விட்டதால் வருமானமும் குறைந்துவிட்டது" என்று திருமலை திருப்பதி தேவஸ்தானங்களின் கமிஷனர் தோழர் பி. வீராசாமி நாயுடு 1948-49-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையில் குறிப்பிடுகிறார்.

மேற்படி ஆண்டில் மொத்த வருமானம் ரூ. 39,29,678-1-9 என்றும், மொத்த செலவு ரூ 23,79,911-1-0 என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப் படுகிறது.

இந்தியா-யு. எஸ். உறவு தத்துவம் 'பட்டவர்த்தன' மாகிறது!

"கம்யூனிஸ்ட் ஆபத்தைத் தடுக்க கேடயமாய்த் திகழும் இந்தியா"

(0)

டாலரால் அடித்து மடக்குமாறு யோசனை

அமெரிக்க அரசுப் பிரதிநிதி 'சுக்குகிரூர்' உண்மையை

வெளியிலிருந்து இந்தியாவுக்குக் கம்யூனிஸ்ட் ஆபத்து ஏற்படுமென்று கருதுவதற்கு இடமே இல்லை. ஆனால் இந்தியா பொருளாதாரத் துறையில் அனுபவிக்கும் துயரங்கள் கம்யூனிட் தத்துவம் நாட்டினுள்ளிருந்தே முளைப்பதற்கான ஆபத்துக்கு இடங் கொடுத்து வருகின்றன வென்பதாக இந்தியாவில் யு. எஸ். அரசுப் பிரதிநிதி தோழர் லோய் ஹெண்டர்சன் நவம்பர் 17-ந் தேதி யன்று, சான் பிரான்ஸிஸ்கோவில் தெரிவித்துள்ளார். அவர் வாஷிங்டனில் சிற்சில விஷயங்களைக் கலந்து பேசிவிட்டு, இந்தியா நோக்கி வந்துகொண்டுள்ளார்.

"இந்தியா, மார்ஷல் திட்டத்திலடங்கிய நாடல்லவானாலும், அதற்கு உதவி பெரிதும் தேவைப் படுகிறது. அமெரிக்கா இந்தியாவில் முதலீடு செய்தால் நல்ல லாபம் (டிவிடண்டு) கிடைக்கும். எப்படி? ஆசியாவில் கம்யூனிஸம் பரவி வருவதைத் தடுத்து நிறுத்தி மேற்கொண்டு பரவவிடாமல், (ஐரோப்பிய நாடுகளுக்கு ஆபத்தில்லாமல்) இந்தியாபார்த்துக் கொள்ளும்"

என்று தோழர் ஹெண்டர்சன் மேலும் தெரிவித்தார்.

யு. எஸ்.—அமெரிக்க உறவு, நேரு வருகையால் உயர்ந்திருக்கிறதென்றும், அமெரிக்கரின் நேச மனப்பான்மையை நேரு நன்கு உணர்ந்து கொண்டாரென்றும், அவரது அமெரிக்க சுற்றுப் பயணம் இந்தியாவில் நன்கு விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிறதென்றும், பத்திரிகையில் வந்துள்ள செய்திகள், அமெரிக்காமீது ஆத்திர வுணர்ச்சியும், பகைமையும் கொண்டிருக்கும் இந்தியர்களைச் சாந்தப் படுத்தவே செய்யுமென்றும் தோழர் ஹெண்டர்சன் மேலும் தெரிவித்தார்.

காங்கிரஸ் :: :: தேய்கிறது!

கிழக்குப் பஞ்சாபில் அண்மையில் மந்திரி சபை மாற்றம் ஏற்பட்டது முதற்கொண்டு, சர்க்கார் குழுவைச் சேர்ந்த காங்கிரஸ் தொண்டர்களும் மாவட்ட உறுப்பினர்களுமாக இதுவரை 289 பேர் காங்கிரசைவிட்டே வெளியேறியுள்ளனர்.

இப்படி ராஜினாமா செய்தோருள் 12 பேர் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களென்றும், 119 பேர் தாலுகா காங்கிரஸ் கமிட்டிகளின் உறுப்பினர்களும் நிர்வாகிகளுமாவாரென்றும் தெரிகிறது. வெளியேறியோரில் 19 பேர் வரை சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்துவிட்டனராம்.

மாலை மணி

சென்னை 19—11—49 சனிக்கிழமை

தனி மனிதன் உரிமைக்குக் கொள்ளையோ கொள்ளை!

"மாகாணத்தின் நலத்திற்கும், தனி மனிதனின் சுதந்திரத்திற்கும் இரண்டு பகைவர்கள் இருந்து வருகிறார்கள். அழிவு வேலைகளில் ஈடுபட்டிருக்கும் கம்யூனிஸ்டுகள்-ஒரு பகை. உயர்நீதி மன்றங்கள் ஏன் என்று எதிர்த்துக் கேட்க முடியாதபடி, எல்லா அதிகாரங்களையும் தானே கொண்டிடுக்க விரும்பும் அரசாங்கம்-மற்றொரு பகை."

என்று சென்னை மேல் சபைக் கூட்டத்தில், எதிர்க் கட்சித் தலைவர் தோழர் வி. கே. ஜான் அவர்கள், பொது அமைதிப் பாதுகாப்பு மசோதாவைக் கண்டித்துப் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

கம்யூனிஸம்-சக்திக் கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி என்ற அடிப்படையில், இந்த நாட்டிற்கேற்றாற் போல் அமைந்து, நாட்டின் வறுமைப் பிணி போக்கும் நல்ல மருந்தாக அமைய வேண்டும் என்பதும், அந்த மருந்தை மக்கள் அனைவரும் உட்கொள்ளும்படி செய்ய, அறிவுப் புரட்சி ஏற்பட வேண்டும் என்பதும், அந்த அறிவுப் புரட்சியை ஏற்படுத்துகையில், தேவையான அளவுக்கு அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும் நமது உள்ளக்கிடக்கையாகும். அஃதில்லாமல், குற்றமற்ற தனிப்பட்ட பலருக்குத் தீங்கிழைக்கும் முறையில், கொள்ளை, கொலை, தீவைத்தல், நாசம் விளைத்தல் போன்ற முறைகள், நாட்டிற்கு நலம் பயப்பனவுமகா; கம்யூனிசம் பரவச் செய்வதற்கான வழியுமாகா. மக்களுக்கு நலம் பயப்பதாகச் சொல்லி, கொலை, கொள்ளை தீயிடுதல், பாழ்செய்தல் போன்ற தீங்கிழைப்பதையே கொள்கையாகக் கொண்ட எவருடைய செயலும், கண்டிக்கப்பட வேண்டியதேயாகும். இந்த அடிப்படையின் மீது நின்றுதான்போலும், தோழர் வி. கே. ஜான், கம்யூனிஸ்டுகளை, நாட்டின் நலனுக்கும், தனிமனிதன் உரிமைக்கும் பகைவர்களாவார்கள் என்று கூறியுள்ளார்.

நாட்டிற்கும் தனிமனிதனுக்கும் கேடு பயப்பதில், கம்யூனிஸ்டுகள் பொறுப்பாளிகளா, இல்லையா என்பதிலே யாவது சிறிது ஐயப்பாடு இருக்கலாம்; ஆனால் நீதிக்கு இடங் கொடுக்காமல் எல்லா உரிமையையும் தானே வைத்துக்கொள்ள எண்ணும் இந்த மாகாண அரசாங்கம், நாட்டின் நலனுக்கும், தனிமனிதன் உரிமைக்கும் பகையாக இருந்து வருகிறது என்பது மட்டும், தெளிவாக யாருக்கும் தெரியத்தான் செய்கிறது.

பொது அமைதிப் பாதுகாப்பு மசோதா சட்டமாக்கப்பட, எந்தக் காரணங்கள் அடிப்படையாக இருக்கின்றன என்று மந்திரி மாதவமேனன், கீழ்ச் சபையில் கூறினாரோ, அதே அபத்த-ஆணவ-அதிகாரக் காரணங்களைத்தான் மேல் சபையிலும் கூறியுள்ளார். தனிமனிதன் ஒருவன், அரசியலார்க்கு என்று இருக்கும் 'அதிசயக் கண்களுக்குச் சந்தேகப் பிறவியாகப் பட்டால், போதும், அவ்வளவுதான்! உடனே அவன் கைது செய்யப்பட்டுக் காவலிற்கிடத்தப்படுவான்! அதற்குப் பிறகு அவனைப் பற்றி, எதனையும், எங்கும், எப்பொழுதும், யாரும் கேட்கக்கூடாது! இதுதான் காந்திய நெறியில் செல்லும் காங்கிரஸ் அரசாங்கம், தனி மனிதனுக்குத் தரும் 'கருணை!'

"தனி-மனிதனின் தனி உரிமையைத் தடுத்து வைக்க, முடிந்த ஒரு எல்லைக் கோடு உண்டு என்றால் அது இந்தப் பொது அமைதிப் பாதுகாப்பு மசோதா — தான்" என்று தோழர் வி. கே. ஜான் நன்கு இடித்துக் கூறியுள்ளார். அரசாங்கத்தின் இரக்க—மற்ற மனம் இரங்குமா? எப்படி இரங்கும்!

கொள்ளை, கொலை, தீவைத்தல் போன்ற பாழ்ச்—செயல்களைத் தடுக்கவும், மீறிச் செய்வோரைத் தண்டிக்கவும் போதுமான அளவு அதிகாரங்கள், வெள்ளைக்கார ஏகாதிபத்ய ஆட்சியின்போதே உருவாக்கப்பட்டு, இன்றைய ஆள வந்தார்கள் கையிலே கொடுக்கப்பட்டிருந்தும், அவற்றைத் திறமையுடன் செலுத்த ஆற்றலில்லாமல், குற்றமற்றப்பலரின் அடிப்படை உரிமைகளையே பறித்துக்கொள்ளும்முறையில் மசோதா நிறைவேற்றுவதென்றால், இன்றைய ஆட்சியை ஜனநாயகத்திற்குப் பாடுபடும் ஆட்சி என்று தெளிவான அறிவுபடைத்தோர் யார்தான் ஒப்புக்கொள்ளமுடியும்? இந்த 'ஒரு கட்சி ஆணவ மசோதாவால்' எத்துணை ஆயிரம் குற்றமற்ற எளியோர் காவற் கைதிகளாக ஆக்கப்பட போகின்றனரோ? நினைக்கில் நெஞ்சு திடுக்கிடுகிறது!

சென்ற இரண்டரை ஆண்டு காலத்திற்குள், காவற் கைதிகளாக ஆக்கப்பட்டவர்களில் சுமார் 250 பேர்கள். தாங்கள் குற்றமற்றவர்கள் என்று உயர் நீதிமன்றத்தில் முறையிட்டு நீதி கேட்க, சுமார் 175 பேர்கள் குற்றமற்றவர்கள் ஆகவே அவர்கள் காவலில் வைக்கப்பட்டிருப்பது ஆகாது, என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறார்கள். இம்மாதிரி முறையிடும் மனுக்கள் இன்னும் 400 இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. நீதிமன்றம் புகுந்த காரணத்தினால், 250 பேர்களில் சுமார் 175 பேர்கள் நீதி பெற்று, தனி உரிமையைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. நீதி 175 பேர்களை நிரபராதிகள் என்று கூறுகிறது; ஆனால் மந்திரி மாதவமேனன் நீதியை அப்புறத்தள்ளிவிட்டு, நிரபராதிகளைக் கட்சிமாச்சரியம் ஒன்றையே காரணமாக வைத்துக் கொண்டு, குற்றவாளிகளாகவே கருதி காவலில் வைக்க, மசோதாவை நிறைவேற்றிவைப்பதன் மூலம் வாதாடுகிறார். நீதி அடித்துத் துரத்தப்படுகிறது; ஆணவ அதிகாரம் ஆணை செலுத்துகிறது; தனி மனிதனின் உரிமை பறிக்கப்படுகிறது! இதுதான் இன்றைய ஆட்சியில் 'கைகண்ட' பலன்!

"சட்டத்தையும் ஒழுங்கையும் அதிகாரத்தின் மூலம் புகுத்த முயற்சிப்பதைத் தவிர, அமைதியைப் பரப்பவும், மக்களின் வளத்தைப் பெருக்கவும் அரசாங்கம் சாதித்த சாதனைதான் என்ன? வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிற்றா? குறைந்த சம்பள ஊழியர்களுக்குப் போதுமான அளவு சம்பளத்தைக் கொடுத்ததா? போதுமான அளவு பஞ்சப்படியைத்தான் கொடுக்க முன்வந்ததா? உற்பத்தியைப்பெருக்கத்தான் ஏதாவது செய்ததா? எதும் செய்யவில்லையே! வாழ்க்கைச் செலவு உயர்வது, கம்யூனிசம் பரவுவதற்கு ஒரு முக்கிய காரணமாயிற்றே? அதைத் தடுக்க அரசாங்கம் என்ன செயலை மேற்கொண்டது?"

என்று தோழர் ஜான், அரசாங்கத்தின் திறமையின்மையையும், அதனால் ஏற்படும் குழப்ப நிலைகளையும் தெளிவுபட எடுத்துக் கூறுகிறார்.

"செய்தக்க வல்ல செயக் கெடும், செய்தக்க, செய்யாமையானுங் கெடும்"

என்று வள்ளுவர் கூறியதற்கொப்ப, இன்றைய அரசாங்கம் எந்த மசோதாவை நிறைவேற்றக் கூடாதோ, அந்த மசோதாவை நிறைவேற்றி மக்களுக்குக் கேடு செய்ய முயலுகிறது; எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் அப்படியிருப்பதன் மூலம் மக்களுக்குக் கேடுவிளைய விடுகிறது! என்னே விந்தை!

இன்றைய ஆட்சி மட்டுமல்லாமல், எதிர்கால ஆட்சியும்கூட, இதே 'ஹிட்லர்முறையில்' செல்லும்படியான அளவுக்கு இந்திய அரசியல் அமைப்பு அவை, சட்டதிட்டங்களைநிறைவேற்றி வருகின்றது. அரசியல் அமைப்பு நகல் 22-வது பிரிவின் கீழ், "முன்னெச்சரிக்கையாகக் காவற்படுத்தும் முறை, சட்டத்தின் அனுமதி பெற்றதாக இருக்க வேண்டும். நிர்வாகத்தினரின் விருப்பப்படி அது நிகழ்வதாக இருக்கக்கூடாது." என்று, திருத்தப்பட்ட ஷரத்து இருப்பதாகத் தோழர் அம்பேத்கார் அறிவிக்கிறார். இதனால் தனி மனிதன் உரிமை, சந்தேகத்திற்கிடமில்லாமல் காப்பாற்றப்பட்டுவிட்டதாகக் கூற முடியாது. 'சட்டத்தின் அனுமதி இருக்கவேண்டும்" என்றுதான் டாக்டர் அம்பேத்கார் அவர்களால் அறிவிக்கமுடிகிறதேயல்லாமல், சட்டம் எப்படிப்பட்டதாக அமையவேண்டும் என்று அவர் அறிவிக்கவில்லை. எப்படிப்பட்ட சட்டத்தையும் எவ்வளவு கடுமையாகவேண்டுமானாலும், எவ்வளவு உரிமையைப் பறிக்கக்கூடியதாக மேண்டுமானாலும் ஆக்கிக்கொள்ள யதேச்சாதிகாரம் அரசாங்கத்திடம் இருக்கும் போது, "சட்டத்தின் அனுமதி பெறவேண்டும். நிர்வாகத்தினர் தம் விருப்பப்படி யாரையும் காவற்படுத்தக் கூடாது" என்றுசொல்லுவதில் என்ன பொருள் இருக்க முடியும்! தனிமனிதனின் உரிமையைப் பறிக்க எவ்வழியிலும் இடமுண்டு என்னும் போது, அந்தச் செயல் சட்டத்தின் வழி ஈடேறினால் என்ன? அல்லது நேரே நிர்வாகத்தினரால் நிறைவேறினால்-தான் என்ன? எல்லாம் ஒன்றுதான்!

தனி-மனிதன் உரிமைக்குக் கொள்ளையோ கொள்ளை! என்ற நிலை, ஆணவ அதிகாரத்தால் ஏற்படுத்தப்படும் போது, எதைச்சொல்லித்தான் என்ன விளையப் போகிறது! அறிவை ஆணவம் மீறுகிறது!

நடுத்தர வகுப்பார் நலிகின்றனரே!

ஆட்சியாளர் கவனிக்காவிடில் ஆபத்து விளையும்

பம்பாய் முதலாளியின் முதலைக் கண்ணீர்!

"தற்போது நம் நாட்டிலுள்ள நடுத்தர வகுப்பு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் எதிர்காலத்தில் பல தீமைகள் விளையக்கூடும் என்று கருதுகிறேன். ஆட்சியிலுள்ளவர்கள் இதனை இன்றைய தினம் உணராமலிருக்கலாம். ஆனால் 'இன்று குழந்தையாயிருப்போர் நாளை பெரிய மனிதராவர்' என்ற உண்மையைக் கவனிக்கின்ற போது இன்று நடுத்தர வகுப்பார் படும் கஷ்டத்தால் வருங்கால சந்ததியே பெரிதும் பாதிக்கப்படும்"

என்று பேசியிருக்கிறார் பம்பாய் முதலாளிகளில் ஒருவரும கிழக்கிந்திய பருத்தி வர்த்தகச் சங்கத்தலைவருமான தோழர் புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ்.

தற்காலம் நாட்டில் நிலவி வரும் பொருளாதார நிலையைக் கேட்டால் நடுத்தர வகுப்பாரின் நல்வாழ்வு கெட்டுவிடுகிறதேயென்று கண்ணீர் வடிக்கிறார் அந்த முதலாளி.

உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, இருக்க இடமில்லை என்ற நிலையிலே கோடிக்கணக்கான மக்கள் ஏங்கித்தவிக்கும் காட்சி, தோழர் புருஷோத்தமதாவின் கண்களில் படவில்லை. நடுத்தர வகுப்பார் நலிவது மாத்திரம் அவர் கண்களில் படுகிறது. அய்யோ அடுக்குமா இந்த நிலை என்று அலறித் துடிக்கிறார். ஆட்சியாளர் இதனைக் கவனித்து ஆவன செய்யாவிட்டால் ஏதோ குடி முழுகிப் போகும் என்கிறார். இதற்குக் காரணமென்ன என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

முதலாளிகளுக்கு வக்காலத்துக்கு வாங்கிக்கொண்டு பேசுவதற்குப் பதிலாக, முதலாளி வர்க்கத்தின்மீது தனக்குள்ள பச்சாதாபத்தை நடுத்தரவகுப்பார் மீதேற்றி சயம்பட உரைக்கிறார் தோழர் புருஷோத்தமதாஸ். இன்று நடுத்தர வாழ்வில் இருப்பவர்கள்தாம் நாளை முதலாளிகளாய் ஆகக்கூடியவர்கள்.

எனவே முதலாளித்வத்தை வாழவைக்க வேண்டுமானால் இன்றைய தினம் நடுத்தர வாழ்வு வாழ்வோரின் நிலையை உயர்த்தவேண்டும். இதுதான் அவரது உள்ளக்கிடக்கை. இந்த உள்ளக் கிடக்கையை எச்சரிக்கை என்ற உருவிலே ஆட்சியாளருக்குத் தெரிவிக்கிறார்.

தோழர் புருஷோத்தமதாஸ் கருத்துப்படியே பார்த்தாலும் நடுத்தர வகுப்பாருக்கு என்ன அப்படிபட்ட ஆபத்து வந்துவிட்டது இன்று? புருஷோத்தமதாவின் பேச்சுக்கும் நடுத்தர வகுப்பார் என்று அழைக்கப்படும் குட்டி முதலாளிகளின் நிலைமைக்கும் பொருத்தமேயில்லை! சில ஆயிர ரூபாய் முதல் வைத்திருக்கும் ஒரு நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர் எப்படி ஒரு லட்சாதிபதியாக ஆகலாம் என்றும், லட்சாதிபதிகளாயிருப்பேர் எப்படி கோடீஸ்வரர்களாவது என்றும் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்களேயன்றி, உண்மையில் அவர்களுக்கு இருக்கும் கஷ்டம் தான் என்ன? மறுநாள் பொழுது விடிந்தால் கஞ்சிக்கு வழியில்லையேயென்று கவலைப்படுகிறார்களா? குந்தக் குடிசையில்லையே என்றோ, ஓட்டைக் குடிசையில் வாழ்வது எப்படி என்றோ ஏக்கங்கொள்ளுகிறார்களா? அல்லது உடுத்த உடையில்லையேயென்று உளம் நொந்து வாடுகிறார்களா? இல்லையே; அப்படியெல்லாம் அல்லற்படுவோர் பலர் இருப்பதைப்பற்றிப் பேச நாவில்லையா புருஷோத்தமதாஸர்களுக்கு?

எனவே, முதலாளிகள் இங்ஙனம் முதலைக் கண்ணீர் வடிப்பதைக் கண்டு ஆட்சியாளர் கவலையோ கலக்கமோ கொள்ளத் தேவையில்லை. பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும் கடைசிப் படியிலிருக்கும் ஏழையர்பால் அவர்கள் நாட்டஞ் செல்லட்டும். முதலில் அவர்கள் நிலையை உயர்த்தப் பாடுபடட்டும். அதன் பிறகு பார்த்துக்கொள்ளலாம் நடுத்தர வகுப்பாரை நல்வாழ்வு வாழச்செய்யும் பணியை.

புழலேரி நீர் மட்டம்

ஒரே நாளில் 1¼ அடி உயர்வு

நேற்று முன் தினம் பெய்த மழையின் காரணமாக புழலேரி நீர்மட்டம் 1¼ அடி உயர்ந்துள்ளது. 17-ம் தேதி காலைவரை புழலேரியில் 4. 26 அங்குலமும் தாமரைப்பாக்கம் அணைக்கட்டில் 8. 88 அங்குலமும் பூண்டியில் 7. 97 அங்குலமும் மழை பெய்துள்ளது. இதன் காரணமாக புழலேரியின் நீர் மட்டம் 40·06 அடியிலிருந்து 41. 27 அடியாக உயர்ந்துள்ளது. ஒரே நாளில் நீர்மட்டம் 1.21 அடி உயர்ந்துள்ளது.

சோழவரத்துக்கு வரும் மேல் புறக்கால்வாயில் 5½ அடி தண்ணீர் ஓடுகிறது. பூண்டி தேக்கத்தில் நீர் மட்டம் 130 83 அடியிலிருந்து 131-50 அடியாக உயர்ந்துள்ளது (பூண்டி தேக்கத்தின் அளவு 138 அடி.

ஆரிய வர்த்தமா? அந்தப் பெயர் வேண்டாம்!

—————:0.—————

அ. நி. சபை அச்சப்படுவதேன்?

—————:0:—————

சரித உண்மையை மறைக்கமுடியாதே!

திராவிட மொழி, திராவிட நாடு என்றெல்லாம் நாம் கூறும் போதும், ஆரியம் என்று நாம் பேசும் போதும் ஆரியமாவது திராவிடமாவது என்று அலட்சியம் கலந்த தொனியில் பதிலிறுப்பது நமது தேசியத்தோழர்களிடம் அடிக்கடி நாம் காணும் பண்பு. அப்படிப்பட்ட தேசிய தோழர்களுக்கு ஆரியவர்த்தம் என்றொரு பகுதி இவ்விந்திய துணைக்கண்டத்தில் உள்ளது, என்பதைச் சுட்டிக்காட்டும் நல்வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது இப்பொழுது. ஐக்கிய மாகாணத்தை "ஆரியவர்த்தம்" என்று பெயர் மாற்றி அமைக்க வேண்டும் என்று அம்மாகாண காங்கிரஸ் அன்பர்கள் பலர் சென்ற சிலநாட்களுக்கு முன்பு தீர்மானித்தனர். மத்திய மாகாண காங்கிரஸ் அன்பர்களின் இந்த எண்ணம் ஈடேறட்டும்; அதன் பிறகு ஆரிய வர்த்தம் பற்றிய நமது கருத்தையும் ஈடேறும்படிச் செய்யலாமென்றிருந்தோம். ஆனால் அந்த வேலைக்கே இடமில்லாமற் செய்துவிட்டது அ. நி. சபை. மத்திய மாகாணத்துக்கு "ஆரிய வர்த்தம்" என்று பெயர் வைக்கக்கூடாது என்று அ. நி. சபை காங்கிரஸ் கட்சி அண்மையில் முடிவு செய்துவிட்டது. 'ஆரிய வர்த்தம்' என்ற பெயரைத் தவிர வேறு ஏதாவதொரு பெயரைக் குறிப்பிடுமாறு ஐ. மா. காங்கிரஸை அ. நி. சபைக் கேட்டிருக்கிறதாம்.

ஐ. மா. காங்கிரஸ் அன்பர்களே கூடி அந்த மாகாணத்தை ஆரியவர்த்தம் என்று அழைக்க விரும்புவதைத் தடுத்து, வேறு பெயரிடுமாறு வேண்டிக்கொண்டிருக்கிறது அ. நி. சபை. யென்றால் இதற்குக் காரணமென்ன? ஐ. மா. ஆரியவர்த்தம் என்று அழைக்கப்படுவதால் அ. நி. சபைக்கு வரும் நஷ்டம் என்ன? இதுதான் சிந்திக்கவேண்டிய விஷயம்.

விந்தியமலைக்கப்பாற்பட்ட பகுதியை ஆரிய நாடென்றும், அதற்குத் தென்பாலுள்ள பகுதியைத் திராவிடம் என்றும் நாம் அழைக்கின்றோம். ஆரிய நாடு திராவிடநாடு என்று இவ்விந்திய உபகண்டம் பிரியவேண்டும் என்றும் வற்புறுத்திவருகிறோம். எங்களுடைய இந்தப் பிரிவினைப் பிரசினைக்கு மக்களிடையே ஆதரவு இருந்துவருகிறது. எனவேதான, அ. நி. சபை ஐக்கிய மாகாணத்தை ஆரியவர்த்தம் என்று அழைக்க அஞ்சுகிறது. ஆரியவர்த்தம் என்பது உறுதியானால் திராவிட நாட்டுப் பிரச்னைக்கு ஆக்கம் அளிப்பதுபோலாகிவிடும் என்ற அச்சம் அவர்களைப் பிடித்தாட்டுகிறது.

ஆனால் அ. நி. சபை உறுப்பினர்களுக்கு நாமொன்று கூற ஆசைப்படுகின்றோம். "அ. நி. சபை உறுப்பினர்களே, நீவிர் அரசியல அறிந்தவர்கள், சரித்திரம் படித்தவர்கள். உங்களுக்கு நன்றாகத் தெரியும் இந்தியா ஒரு துணைக்கண்டம், அதிலே ஆரியநாடு—திராவிட நாடு என்ற இரு பெரும்பகுதிகள் உள்ளன வென்று. அப்படியிருக்க ஏன் இந்த உண்மையை மறைக்கப் பார்க்கிறீர்கள்? அப்படியே நீங்கள் மறைத்தாலும் சரித்திர உண்மை மறையுமா? இதை ஏன் நீங்கள் சிந்தித்துப் பார்க்கக் கூடாது?

எனவே, இனி நீங்கள் உண்மையை மறைத்துப் பயனில்லை. ஐக்கிய மாகாணத்தை மட்டுமல்ல, விந்தியத்துக்கு அப்பாற்பட்ட பகுதிகளை யெல்லாம் ஆரியவர்த்தம் என்று தாராளமாகப் பெயரிட்டழையுங்கள். அதிலே குற்றமில்லை. அதேபோலவே, இதன் தென்பகுதியை—'திராவிட நாடு' என்று அழையுங்கள். அப்படி நீங்கள் அழைக்கத்தவறினாலும் காலம் அந்த வேலையைச் செய்யத்தான் போகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம்

☆

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

320

சர்க்கார் பொது மருத்துவ விடுதி

சென்னை சர்க்கார் பொது மருத்துவ விடுதியில் (ஜெனரல் ஆஸ்பத்திரி) படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் பிரச்சினையை சர்க்கார் ஆலோசித்து வருவதாகவும், ஆனால் இடத்தை விரிவாக்கும் திட்டமட்டும், இப்பாதைய பொருளாதார நெருக்கடி நிலையை முன்னிட்டு முடியாத காரியமென்றும் பொது சுகாதார மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் சென்னை மேல்சபையில் நவம்பர் 17-ந்தேதி தெரிவித்துள்ளார். இட நெருக்கடியை சர்க்கார் உணராமலில்லையென்றும், சென்னைக்குச் சமீபத்திலேயே புதிதாகப் பெரிய மருத்துவ விடுதியொன்றைக் கட்டும் திட்டங்கள் முன்பு இருந்துவந்தன வென்றும் அவற்றையும் இப்போது சர்க்கார் ஆலோசித்து வருகின்றனரென்றும் மந்திரி மேலுங் குறிப்பிட்டார்.

வர்த்தகம் செய்ய வருகிறோம் வழி விடுங்கள்!

தொழில்களை தேசிய மயமாக்காதீர்கள்

அமெரிக்க முதலாளிகளின் ஆசை

பண்டிதர் பவனி வந்ததன் விளைவா?

இந்தியாவின் ஆட்சி முறை முதலாளித்வ அடிப்படையில் அமைந்திருக்கிறது. ஆட்சியாளரின் சொல்லும் செயலும் முதலாளித்வத்தை நிலை நாட்டும் போக்கிலே போய்க்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமாறி இந்நாடு சமதர்ம நாடாகாத வரை இந்நாட்டு மக்கள் எல்லோரும் இன்புற்றிருக்கச் செய்ய இயலாது என்று நாம் அடிக்கடி கூறி வருகிறோம். நமது கூற்றுக்கு எடுத்துக்காட்டாக முதலாளித்வ நாடாகிய அமெரிக்கா இந்தியாவுடன் உறவாடும் தன்மையை அவ்வப்போது எடுத்துக் காட்டியும் வந்திருக்கிறோம். இங்ஙனம் உண்மையான நிலையைச் சுட்டிக் காட்டும் நமக்குத் தேசியத் தோழர்களால் தரப்படும் பட்டம் தேசத்துரோகிகள், பிற்போக்குவாதிகள் என்பன. ஆனால் யார் உண்மையிலேயே பிற்போக்குவாதிகள்; யாருடைய செயலால் இந்நாடு பிற்போக்குப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. என்பதை விளக்க வேண்டுமானால் இந்திய ஆட்சியாளர் அமெரிக்காவுடன் குலவும் காட்சியையும், அமெரிக்கா இந்தியாவை தனக்கோர் வளமான மார்க்கெட்டாகக் கருதிக் கொண்டிருப்பதையும் சற்று கவனித்தாலே போதும். அமெரிக்க டாலர் ஏகாதிபத்தியத்துக்கு இந்தியா அடிமையாகிவிட்டது என்பது தெள்ளிதிற் புலப்படும்.

தொழில்களை தேசியமயமாக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்தும்போதெல்லாம் இந்த ஆட்சியாளருக்கு நமது பேச்சு எட்டிக்களிப்பாகத் தோன்றுகிறது. ஆனால் அதே சமயத்தில தொழில்களைத் தேசியமயமாக்குவதில தாம் அக்கரை கொண்டிருப்பதாகக் காட்டிக்கொள்ளவும், சமதர்மவாதிகளைத் திருப்தி செய்யவும் விரும்புகின்றனர். இங்ஙனம் இரட்டை வாழ்க்கை வாழ விரும்பும் இவர்களுடைய உண்மை நிலை என்ன என்பதை அமெரிக்க முதலாளிகள் அம்பலப்படுத்தி விடுகின்றனர். அண்மையில் நியூயார்க்கில் அமெரிக்க முதலாளி ஒருவர் பேசியிருக்கும் பேச்சை கவனித்தால் உண்மை விளங்கும்.

அமெரிக்க முதலாளிகள் இந்தியாவில் மூலதனம்போட்டு வர்த்தகம் செய்ய விரும்புகிறார்களாம். ஆனால் தொழில்களை யெல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்று மக்கள் கிளர்ச்சி செய்யக்கூடாதாம். இதற்கு இந்திய சர்க்கார் உறுதி தர வேண்டுமாம். இது அமெரிக்க முதலாளிகளின் வாதம். இதுமட்டும் இதனை வெளிப்படையாக கூறவிரும்பாத அமெரிக்க முதலாளிகள், இன்று, பண்டித நேரு அமெரிக்காவில் பவனி வந்த பிறகு சொல்லுகிறார்கள் என்றால் இதிலிருந்தே தெரிந்துகொள்ளுங்கள் அமெரிக்க முதலாளிகளுக்கும் இந்திய அரசியலாருக்கும் எத்தகைய உறவு உருவாக்கப்பட்டுள்ளது என்பதை.

என்னத் துணிவு இருந்தால் இந்திய சர்க்காரைப் பார்த்து "தொழில்களை தேசிய மயமாக்க மாட்டோம் என்று உறுதி கூறுங்கள்" என்று அமெரிக்க முதலாளிகள் கேட்டிருக்கக்கூடும் என்பதை வாசகர்கள் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். தாம் வாழ, தம்முடைய நாட்டுவளம் பெருக மற்றொரு சுதந்திரநாட்டைப் பார்த்து, "எனக்கு வழி திறந்துவிடு. குறுக்கே நிற்கமாட்டேனென்று உறுதி கூறு" என்று கேட்கும் அளவுக்கு அமெரிக்க முதலாளிகளின் உள்ளத்தில் உரம் ஏற்பட்டிருக்கிறதென்றால், அதற்குக் காரணகர்த்தாக்கள் யார்? இந்நாட்டு ஆட்சியாளர்களல்லவா? ஏன் இப்படிப்பட்ட நிலை? இருக்கலாமா இந்நிலை ஒரு சுதந்திர நாட்டுக்கு? ஒரு நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது என்றால் அந்நாடு உடனடியாக மேற்கொள்ளவேண்டிய வேலை, தொழில்களை தேசிய மயமாக்குவதுதான். அப்படிச் செய்தால் தான் மக்களின் பொருளாதார சமத்துவம் ஏற்படும். பொருளாதார சமத்துவம் ஏற்பட்டால் தான் நாட்டில் அமைதி நிலவும்.

ஆனால் அமெரிக்க முதலாளிகளின் போக்கும், அதற்கு இந்திய அரசியலார் இணங்கிக்கொடுக்கும் தன்மையும் மேலே கூறப்பட்ட சுதந்திர நாட்டின் இலக்கணத்தையே சீர்குலையச் செய்து, அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதாக இருக்கிறது. எனவே, இந்திய சர்க்கார் சற்று முன்னெச்சரிக்கையுடனிருக்க வேண்டும். முதலாளித்வத்தின் முகங்கோணாமல் நடந்து கொள்ள விரும்பினால் நாட்டு மக்களின் நல் வாழ்வுக்கு முட்டுக்கட்டை போட்டவர்களாவார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இதனை ஏன் இவ்வளவு வலியுறுத்திக் கூறுகின்றோமெனில் மேலே எடுத்துக் காட்டப்பட்ட அமெரிக்க முதலாளிகளின் உள்ளக்கிடக்கையை வெளியிட்டிருக்கிறதொரு தேசியஏடு. யாரோ ஒரு பிரபல அமெரிக்க பொருளாதார நிபுணர் அவ்வாறு கூறினார் என்று அவ்வேடு எழுதுகிறது அமெரிக்கரின் உள்ளக்கிடக்கை என்ன என்பதை ஏற்கனவே நாம் அறிவோம். அதற்கு அந்த பிரபல அமெரிக்கப் பொருளாதார நிபுணரின் பேச்சு போதிய விளக்கமாக அமைந்திருக்கிறது. விஷயத்தை விளக்க இதைவிட வேறென்ன சான்று தேவை?

கடம்பத்தூரில் பொதுக்கூட்டம்

—— ——

நடராசன் - மதியழகன் பேச்சு

செங்கற்பட்டு மாவட்டம் கடம்பத்தூரில் 13-11-49 மாலை மறுமலர்ச்சி மன்ற ஆதரவில் மாபெருங்கூட்டம் ஒன்று சிறப்புற நடந்தேறியது. சுற்றுப்புற கிராமங்களிலிருந்து விவசாயத் தொழிலாளர்கள் உட்பட ஏராளமானவர்கள் வந்திருந்தனர்.

அழகிய பந்தலும், தோரணங்களும் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மாலை 5-மணிக்கு நிகழ்ச்சி துவக்கப்பெற்றது. திருவள்ளூர் தோழர் தீனதயாளு திராவிடப் பண்பாடினர்.

கழகச் செயலாளர் யாவரையும் வரவேற்றுப் பேசினார்.

தோழர் கன்னியப்பன் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, அன்னுரையாக சிறிது நேரம் பேசினர். அடுத்து தோழர்கள் திருவள்ளூர் தேவராசன், நேசன் மன், செல்வம் ஆகியோர் பேசினர்.

கே. ஏ. மதியழகன்

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் பேசுகையில் மக்களின் வாழ்க்கைத் துறையில் ஒவ்வொன்றிலும் மறுமலர்ச்சி அதாவது பழமைகள் ஒழிந்து அறிவுத்துறையில் முன்னேற வேண்டுமென்றும், மேல் நாடுகள் அம்முறையிலேயே விடுதலையடைந்துள்ளதென்றும், கிராம மக்கள் முதலில் கல்வி அறிவு பெற வேண்டுமென்றும், அதற்காவன மறுமலர்ச்சிமன்றத்தார் செய்யவேண்டு மென்றும் குறிப்பிட்டு, சுமார் 1-மணி நேரம் விரிவாக சொற்பொழிவாற்றினர்.

என். வி. நடராசன்

கடைசியாக தோழர் என். வி. நடராசன் பேசுகையில், கிராமங்களும், கிராம மக்களும் வாழ்க்கை வசதி, கல்வியறிவு, சமுதாய—அரசியல் விவகாரங்கள் ஆகியவைகளில் முன்னேறாமல் எந்நாடும் விடுதலையடைந்துவிடவில்லை யாதலால் நம் நாட்டிலும், இனி கிராமாந்திரங்களிலே உள்ள மக்களிடையே முக்கியமாக அறிவியல் சம்பந்தமான பிரசாரங்கள் புரியவேண்டுமென்றும், கடவுள்—மதம்—மோட்சம்—நரகம், புராணம் ஆகியவைகளில் குருட்டு நம்பிக்கைகள் ஒழிய வேண்டுமென்றும், அறிவும்—அன்புமே கடவுளேயன்றி, உருவங்களும், பூசைகளும், உற்சவங்களுமல்லவென்றும், நமது நாட்டில தோன்றிய பெரிய ஞானிகள்—பக்த சிகாமணிகள்—சித்தர்களே இவ்வாறு கூறியிருக்கிறார்களென்றும், மற்றும் கிராம மக்கள் அன்றாட அரசியல் விவகாரங்களைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்றும் எடுத்துக்காட்டி, தற்கால சமுதாய—அரசியல் நிலை என்பது பற்றி 2-மணிநேரம் உணர்ச்சியிக்க சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின், செயலாளர் நன்றிகூற, கூட்டம் இரவு 8-45 மணிக்கு முடிவுற்றது.

(வி. உ.)

வட நாட்டு ஆதிக்கம் ஒழியவேண்டும்.

அடக்கு முறையினல் ஆளமுடியாது

பேராவூரணியில் நடராசன் - ஆசைத்தம்பி சொற்பொழிவு

பேராவூரணி, நவ. 8—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி திராவிட முன்னேற்றக் கழகத் திறப்பு விழா பொதுக் கூட்டம் 7-11-49 மாலை 5-30 மணிக்கு, ரயிலடிக்கருகிலுள்ள வ. உ. சி. திடலில், அழகிரி அரங்கில் அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையில் சிறப்புற நடைபெற்றது. ஏராளமான தோழர்கள் குழுமியிருந்தனர்.

தோழர் கருப்பையா அவர்களால் திராவிடப்பண் பாடப்பட்டது.

செயலாளர் தோழர் கு அடைக்கலம் யாவரையும் வரவேற்று, கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துக் கூறினர்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

விருதைத் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி தலைமை வகித்து, முன்னுரையாக பேசியதாவது:—

தோழர்களே! திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கக் காரணங்களை யான் கூறவேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறேன்.

நம் நாட்டில் பார்ப்பனீயம் தலைவிரித்தாடி வந்த நிலைமை சற்று குறைந்திருக்கிறது. என்ருலும், வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறைப்படி எல்லா வகுப்புகளுக்கும் உத்தியோகங்களில் வாய்ப்பினை அளிப்பதைக் கண்டு அச்சமூகத்தினர் கூப்பாடு போடுகின்றனர். இவ்வித கூப்பாட்டுக்கு நமது மந்திரிகளும் சில சமயங்களில் விட்டுக் கொடுப்பது வருந்தத்தக்கதாகும்.

பார்ப்பனர்களிடம் இன்னும் ஜாதி உயர்வு தன்மையும், அதற்கான சலுகைகள் பெருவது மட்டும்மாறவில்லை. அதற்கு அனுசரணையாக, வடநாட்டு ஆட்சி அவர்களுக்கு அதிக சலுகைகள் தந்து வருகிறது.

ஒரு அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரோ அல்லது கோபால்சாமி அய்யங்காரை விட நமது ஆர். கே. சண்முகமும், சர். ஏ. ராமசாமியும் எந்த வகையில் குறைந்தவர்கள்?

உலக அரசியல் மேதாவிகளில் ஒருவராக சர். ஏ. ராமசாமி அவர்களை இன்று எல்லா நாடுகளும் பாராட்டுகின்றன. அதேபோல, பொருளாதார நிபுணரான ஆர். கே. சண்முகம் அவர்களும் உலக அறிஞர்களாலே போற்றப்பட்டு வருகிருர்.

இவர்கள் இருவரும் காங்கிரசுககு எதிரான கட்சியில் இருந்தார்களேயன்றி, காங்கிரசுககோ, காங்கிரசாருக்கோ கெடுதி செய்தார்கள் என்று இன்று கூட எந்தக் காங்கிரஸ் தலைவரும் கூற முடியாது.

ஆனல் போராட்ட காலங்களில் காங்கிரசை, காங்கிரஸ் தொண்டர்களை பிரிட்டிஷ் சட்டத்தின் மூலம் அன்று காட்டிக் கொடுத்த அல்லாடிகளும், கோபால்சாமிகளும் பார்ப்பனர்கள் என்பதற்காக இன்று பெரிய பதவிகள் அளிக்கப்படுகின்றன. இது நீதியாகுமா?

இதுபோலவே தான், ஒவ்வொரு துறையிலும் வடநாட்டு ஆட்சியின் செல்வாக்கால் பார்ப்பனர்களுக்கு மட்டும் தனிச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. அவ்வ நீதிகள் ஒழிய வேண்டுமானல்; வடநாட்டு ஆதிக்கம் நம் நாட்டைவிட்டு அகல வேண்டும்.

பொருளாதாரத் துறையிலும் அவ்விதமே வடநாடு நம்மை சுரண்டுகிறது; ஆகவே திராவிட முன்னேற்றக்கழகம் வட நாட்டு ஆதிக்கத்தை ஒழித்து நல்லதோர் ஆட்சியை அமைக்க பாடுபடும், என்றும் மற்றும் வைதிக ஆதிக்கம் பற்றியும் முன்னுரையாகப் பேசினர்.

என். வி. நடராசன்

அடுத்து. தோழர் என். வி. நடராசன், சுமார் 2-மணி நேரம் ஆற்றிய சொற்பொழிவில் குறிப்பிட்டதாவது:—

"1947-ம் ஆகஸ்டு மாதத்திலிருந்த நிலைமைக்கும் இன்றைய நிலைக்கும்சற்று ஒத்திட்டுப் பார்ப்போமேயானல், சுயராஜ்யம் கிடைத்துள்ள இந்த 27 மாதங்களில், நம் நாடும், மக்களும், குறிப்பாகத் தொழிலாளத் தோழர்களுக்கும் அன்ருட வாழ்க்கைக்கே பெரும் சங்கடங்கள் வளர்ந்து வந்துள்ளன.

திராவிட முன்னேற்றக்கழகத்தாராகிய நாங்கள் இதை மிகைப்படுத்திக் கூறுவதாக யாரும் கருதி விடமுடியாது. எனதருமை தேசியத் தோழர்களைக் கேட்கிறேன், இந்த இரண்டாண்டுகளில் நம் நாடு, அல்லது மக்களின் இன்னல்கள் எந்த அளவு சரி செய்யப்பட்டோ, முன்னேறியோ உள்ளன என்று கூறமுடியுமா?

அன்ருவது போர் நிகழ்ந்த காலம். விலைவாசி உயாவும், அவசரச்சட்டங்களும் அதன் காரணமாக மக்களுக்குத் தொல்லைகளும் இருந்து வந்தன. அதை ஓரளவு சகித்துக் கொண்டோம்.

அப்போது கூட நமது தேசியத்தலைவர்கள் கண்டிக்காமலில்லை, அதில் வீரர்களாயுமிருந்தனர்.

ஆனல், இன்று 1947-ம் ஆண்டுவரையிருந்த நெருக்கடி ஒன்றுக்குப் பத்தாக வளர்ந்திருப்பது ஏன்? விலைவாசி உயர்வு மக்களின், எஞ்சியுள்ள உயிரையும் அடியோடு பறிக்கிறதே! இதற்குக்காரணம் என்ன? எந்தத்தேசியத் தலைவர்கள் அல்லது ஓட்டு வாங்கிச் சென்ற வீரர்கள் இதைப்பற்றிக் கவலைப்பட்டனர்?

டெல்லி மந்திரிகளின் சம்பளத்திலிருந்து சென்னை மந்திரிகள் சம்பளம் வரை, கல்லுப் பிள்ளையார் போன்று அப்படியேயிருக்கிறது போதாக் குறைக்குச் சுற்றுப் பிரயாணச் செலவு கணக்கில் வைக்க முடியாமல் குட்டி போடுகின்றன.

இந்த லட்சணத்தில் தூதவர்களின் சம்பளம் மனதில் நினைத்தாலே நடுக்க மேற்படுகிறது சட்டசபைஉறுப்பினர்களுக்கு மாதச் சம்பளம், போகவர முதல் வகுப்பு டிக்கட்டு, இன்னும் சட்டசபை நடைபெறும் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு உறுப்பினருக்குத் தனியாக சாப்பாட்டுச் செலவுக்கு ரூபாய் பனிரெண்டு. இதல்லாம்ல் பர்மிட், லைசென்ஸ், கண்ட்ராக்ட் முதலியன.

ஆக இவ்விதம், வரிப் பணத்தை ஊதாரித்தனமாகச் செலவு செய்யப்படுகிறது ஆனல் பாடுபட்டுழைக்கும் பாட்டாளி, 10 அணுவிலிருந்து 14 அணு கூலி உயர்வு கேட்டால் தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், சிறை தண்டனை, அவசரச் சட்டங்கள் ஆகியவைகளைக் கண்டவாறு கையாள்வதும், இன்னும் மித மிஞ்சினல்கையில்பணமில்லை, கடன் கொடுப்பார்யாருமில்லையென்ற பல்லவியுமா?

இப்படிக் கவலையற்று ஆட்சியை நடத்தினல் ஏழை, எளியவருக்கு என்றுதான் நன்மை பயக்க முடியும்என்று கேட்கிருேம்.

சுதந்திரம் பெற்ற மற்ற நாடுகளில் இப்படியா ஊதாரித்தனமாக செலவு செய்யப்படுகின்றது!

நம் நாட்டு மந்திரிகளுக்கு 1500 ரூபாய்சம்பளமென்ருல், டெல்லி மந்திரிகளுக்கு 6000 ரூபாய் ஏன்? தூதுவர்களுக்கு மூவாயிரம் முதல் பத்தாயிரம் வரை ஏன்? அவாகளுக்கு ஆடம்பர வாழ்வு ஏன்?

இந்த வீண் செலவுக்கு நம் மாகாணப் பணமும் கொடுக்க வேண்டுமா? வடநாட்டுஆதிககத்தின் கீழ் இருப்பதால் நம் நாட்டுக்கு எந்த வகையில் லாபம்? அவர்கள் தொடர்பில்லாமல் நாம் வாழ முடியாதென்று எவராவது கூற முடியுமா?

வடநாடும் — தென்னுடும் நேச நாடுகளாயிருக்கட்டும். ஆனல் ஒன்றையொன்று சுரணடி, ஆதிக்கம் செலுத்தும் அநீதி வேண்டாம்என்று திராவிட முன்னேற்றக்கழகம் கூறினல் அது தேசத் துரோகமா? எங்கள் நாடு எந்த நாட்டுக்கும், எங்கள் மொழி வேறெந்த மொழிக்கும், எங்கள்நாட்டினர் வேறெந்த நாட்டினருக்கும் அடிமைப்பட்டிருக்க முடியாது. ஆனல், நண்பர்களாக வாழ்வோம் என்று கூறுவது தேசத் துரோகமா? என்ன சிறு மதி இது!

ஊதாரித்தனமான செலவு! அனுபவமற்ற ஆட்சிமுறை, ஏழை எளியவர்களைத் திண்டாடவிட்டு முதலாளித்துவத்திற்கு மண்டியிடுவது; நம் நாட்டின் அரசியல், உரிமையை, வேறு நாட்டானிடம் ஒப்படைத்துவிட்டு, ஒவ்வொரு தேவைக்கும் அவர்களை வேண்டுதல், தொழிலாளத் தோழர்களின் உரிமையைப் பறித்துத் துன்புறுத்துதல், நம் மொழிக்கு நம் நாட்டிலேயே முதலிடம் இல்லாமலிருத்தல், முன்பின் யோசனையின்றி திட்டம்திட்டுவதும், அடிக்கடி அதை மாற்றித் தொல்லையை விளைவிப்பதும், வரிமேல்வரி, கள்ள மார்க்கெட் தலைவிரித்தாடுதல், விலைவாசி உயர்வு விஷம் போல ஏறுதல் ஆக இப்படிப்பட்ட கொடுமைகள் மலிந்து கிடக்கும் ஆட்சிக்குப் பெயர் சுயராஜ்யமா?

இந்தச் சுயராஜ்யத்தால் யாருக்கு லாபம்? ஏழை மக்களுக்கா, முதலாளித்துவ கும்பலுக்கா?

இவைகளை எடுத்துக் கூறி, கண்டித்து, ஆவன செய்யுமாறு கேட்கும் எதிர் கட்சிக்காரர்களிடம் அடக்குமுறை கைவரிசையைக் காட்டுவதா? இது நேர்மையாகுமா? அறிவுடமை கொண்டதா வென்று கேட்கிருேம்.

அடக்குமுறை எத்தனை காலத்துக்கு நிலைத்திருக்க முடியும்? அதனல் நாட்டை ஆளமுடியுமா? ஆண்டதாக சரித்திர வரலாறு காணுேமே! அடக்குமுறைகளும் ஏகாதிபத்தியங்களும் சரிந்து வீழ்ச்சியடைந்தவைகள் சரித்திரங்களில், நடைமுறையில் காணப்படுகிறதேயன்றி வேறில்லை.

இவ்விதஅடக்குமுறையைக் கையாண்டு வடநாட்டு ஆதிககம் நம் நாட்டில் வேரூன்றிவிடலாம் என்று கருதினல், அந்த எண்ணம் தகர்க்கபபடுமேயன்றி ஒருக்காலும் ஈடேற முடியாது, என்பதை திராவிட முன்னேற்றக்கழகம் நினைவூட்ட விரும்புகிறது.

நம் நாடு தனியாக பிரிய வேண்டுமென்று பார்ப்பனத் தோழர்களிலும் சிலர் உணர்ந்துவருகினறனர். அவர்களும் கால நிலையை அனுசரித்து ஜாதிபாகுபாடு, அதற்கான சஞ்சைகள் முதலியவற்றை மறந்து எல்லோரும் சம நிலையுடன் வாழவேண்டுமென்ற எண்ணத்தை விரைவில் உணரத்தான் போகின்றனர்.

அவ்வித முன்னேற்றப் பாதையை அமைத்துக் கொடுத்து, மக்கள் சக்தியைப் பெருக்கி மடமையை, அதற்கு முட்டுக்கொடுக்கும் ஆதிக்கததை வீழ்ததி, நம் திராவிடத்தை, உண்மையான சுயராஜ்யததை — அதாவது மக்கள் ஆட்சியை நிறுவபாடுபடுவதே எங்கள் கொள்கையாகும். அதற்கு எல்லோருடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் திராவிட முன்னேற்றக்கழகம் வரவேற்கக் காத்துள்ளது."

என்றும் மற்றும் தொழிலாளர் நிலையைப்பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

தோழர்இளவரி கு. அடைக்கலம் சிறிது நேரம் பேசிய பின் தலைவர் முடிவுரை கூற, கூட்டம் இரவு 9-மணிககு இனிது முடிவுற்றது. (வி-உ)

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

மானேஜர் "மாலை மணி"

உபரி மாவட்டங்களில் பங்கீட்டுமுறை இராது

உபரி ஜில்லாக்களைச் சேர்ந்த உபரி பகுதி முனிசிபாலிட்டிகளில், பங்கீட்டு முறையை அமுல் செய்யும் திட்டத்தை சென்னை சர்க்கார் கைவிட்டுவிட்டனராம். இந்திய சர்க்காரைக் கலந்தே இவ்வேற்பாடு செய்யப்பட்டதாம். இதை சென்னை சர்க்கார் நீண்டநாளாகவே ஆலோசித்து வந்ததாகவும், உபரி ஜில்லாக்களில் பங்கீட்டுமுறை அவசியமில்லையென உத்தியோகச் சார்பற்ருேர் பலரும் அபிப்ராயப்பட்டனரென்றும் கூறப்படுகிறது.

உபரி ஜில்லாக்களிலும் சிற்சில பற்ருக்குறைப் பகுதிகளில் மட்டும் பங்கீட்டுமுறை தொடர்ந்திருந்துவருமெனத் தெரிகிறது.

தி. மு. க. துவக்க விழா

விஜயகோபாலபுரம், நவ. 12—

இவ்வூர் தி.மு. கழகத் துவக்க விழா 21—10—49 மாலை 6—மணிக்கு விஜயகோபாலபுரம் (காரணமங்கலம்) பெருமாள் கோவில்முன் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் ஆரம்பிக்கப்பட்டது. திருச்சியிலிருந்து தோழர்கள் எஸ். நெடுமாறன், எம். எஸ். மணி இருவரும் வந்த உடன் இயக்கப்பாட்டுடன் ஊர்வலம் நடைபெற்றது. பின்பு தோழர் அங்கமுத்து நாடடைப் பண்பாட, செயலாளர் வி. எம். விஜயகோபாலன் தலைமையில் கூட்டம் துவங்கியது. தோழர் எம். எஸ். மணி கொடியேற்றுவித்து, கொடியின் சிறப்பு குறித்தும், தி. மு. க. அமைக்கவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதுபற்றியும், ஆரியக் கடவுள்கள் பற்றியும், ஆரியத்தின் சூழ்ச்சி பற்றியும் விரிவாகப் பேசினர். அதை அடுத்து தோழர் நெடுமாறன் பேசுகையில், தமது மாவட்டத்திலே பெரம்பலூர் தாலுக்காதான் கழகமே இல்லாத வட்டம். இதுதான் முதல் கழகம் —முதல் கூட்டம்-முதன்மையான சிற்றூர் என்றும் பேசினர். இடையே மழைத் தூற்றல் இருந்தும் மக்கள் கலையாமல் இருந்தனர். பின்னர் பெருமழைவரவே, வேறு ஒரு இடத்தில் பேசும்படியாக ஏற்பாடுசெய்து, தோழர் நெடுமாறன் சுமார் ஒரு மணி நேரம் பேசினர்.

கடைசியாக தோழர்கள் மூத்துவீரன், சுப்பிரமணியம் ஆகியோர் சிறிது நேரம் கழக அமைப்புவிதம்பற்றியும், கழக எதிர்ப்புநடவடிக்கைக் குறித்தும், வாலிப நண்பர்களின் முயற்சிபற்றியும் எடுத்துரைத்தனர். தலைவர் முடிவுரைக்குப் பின் சுப்பிரமணியம் அனைவரையும் பாராட்டிப் பேசி நன்றியும், வணக்கமும் தெரிவித்தார். கூட்டம் இனிது முடிந்தது. பக்கத்து கிராமங்களிலிருந்தும் பலர் வந்திருந்தனர்.

மறைவு

சென்னை, நவ. 18—

உத்தண்டி-க. நடேச செட்டியார் பாரியாளும் 2-வது வட்டம் (இராயபுரம்) முனிசிபல் கவுன்சிலர் N. ஜீவரத்தினம் தாயருமாகிய தனகோட்டியம்மாள், சென்னை இராயபுரம் பனைமரதொட்டி முனிசிப்ப செட்டி சந்து 7-வது எண்ணுள்ள இல்லத்தில் உயிர் நீத்தவரை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை 9-மணிக்கு சவ அடக்கம் நடைபெற்றது.

மாணவர் கடமை

அண்ணாமலை சர்வகலாசாலையில் மீண்டும் சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு உப அத்யட்சகர் மணவாள ராமானுஜம் செய்து வரும் முயற்சிகளைப் பாராட்டுகிறோம். மாணவர்கள் மீது பழி வாங்கும் நோக்கம் அவருக்கில்லை. ரகளை செய்தது தவறு என்று உணர்ந்து மாணவர்கள் மன்னிப்புக் கோரியதும், இனி ஒழுங்காக அவர்கள் நடப்பர் என்று பெற்றோர் அளித்த உறுதி மொழியும் உப-அத்யட்சகரின் வேலையை இலகுவாக்கிவிட்டன.

மாணவர்கள் வெளியாரின் கைப்பாவைகளாகி விடக்கூடாது. அவர்கள் கடமையை உணர்ந்து நடந்தால்தான் தங்களுக்குள்ள உரிமையாகிய அறிவு வளர்ச்சி என்பதன் முழுப் பயனையும் பெற முடியும். அவர்கள் ஒழுங்காக தமது பாடங்களைப் படித்து, பொது அறிவை வளர்த்துக்கொண்டு, மனம் விரிவடைவது முதற் கடமை. அவர்கள் எதை வேண்டுமானாலும் படிக்கலாம். எந்த விஷயத்தைப் பற்றி வேண்டுமானாலும் விஷயத் தெளிவுக்காக விவாதிக்கலாம். ஆனால் நாட்டின் பொது வாழ்விலே காணப்படும் அரசியல் கட்சித் தகராறுகளையெல்லாம் தங்கள் மாணவ வாழ்வில் புகுத்தி தம்மைக் குட்டிச்சுவராக்கிக்கொண்டு, பிறரையும் பாழ்படுத்திவிட அவர்களுக்கு உரிமையில்லை.

தினமணி
16-11-49

இனி நடப்பவை

விருதுநகர்—இந்நகர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், 20-11-49 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு இவ்வூர் என். பி. எஸ். கட்டிடத்தில் நடைபெறும். கழகப் பற்றுடைய மாணவத் தோழர்களைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

● ● ●

நாகப்பட்டினம்—இவ்வூர் தி.மு.க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 20—11—49 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு நடைபெறும். அதுபோது கழக ஆக்க வேலைகள் பற்றி ஆலோசிக்கப்படும்.

* * *

சென்னை—சென்னை, சூளை மக்கள் மறு மலர்ச்சி மன்றத்தின் சார்பில், சூளை வாத்தியார் கந்தப்பிள்ளைத் தெரு, நாராண்மைக் கழகப் பள்ளியில், 20—11—49 ஞாயிறு காலை 10 மணிக்கு அரசினர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் தோழர் க. தங்கவேலனார் பி. ஓ. எல். (ஹானர்ஸ்) அவர்கள் திருக்குறளில் "வேளாண்மை" என்பது பற்றி விரிவுரையாற்றுவார்.

* * *

சித்தோடு—இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழா 20-11-49 ஞாயிறு அன்று மாலை நடைபெறும். அதுபோது, தோழர்கள் ஈரோடு எஸ். அப்பாவு, என். இ. பாலகுரு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

● ● ●

சென்னை—சென்னை, தமிழ் இளைஞர் கழகத்தின் சார்பில் 20.11.49 ஞாயிறு காலை 9-மணிக்கு மெமோரியல் மண்டபத்தில் தமிழர் மாநாடு நடைபெறும். தோழர் இ. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமை வகிப்பார். தோழர் எஸ். இராமசாமி (சென்னை மேயர்) மாநாட்டைத் திறந்து வைப்பார். டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் கொடியேற்றுவார். நாவலர் சோமசுந்தர பாரதியார் படத்தை தோழர் என். வி. நடராசன் திறந்து வைப்பார். மற்றும் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவர்.

செல்வாக்கிழந்த சர்க்காரின் ஆயுதமே அடக்குமுறைச் சட்டம்

கம்யூனிஸ்டுகளைக் கண்டு கலங்குவீரே, மக்கள் நலனை மனதிற்கொண்டீரா?

வேலையில்லா திண்டாட்டமும் விலைவாசி விஷஏற்றமும் விலக்கிவிட முயன்றீரா?

அதிருப்திக்கனல் சூழ்நிலைக்கு ஆட்சியாளரே பொறுப்பாளிகள்!

'சட்டமன்ற மீது சந்தேகப்படுகிறது சர்க்கார்' என்பதற்கு நற்சான்று!

'மனித வுரிமையை மதியா' அமைதி மசோதா பற்றி வி. கே. ஜான்

சென்னைப் பொது அமைதி நிலைநிறுத்த மசோதா (1949) 17-ந் தேதியன்று மேலசபையிலும் நிறைவேறிவிட்டது.

1947-ம் ஆண்டு பொது அமைதிச் சட்டத்தின் நிபந்தனைகளைத்தும் இம்மசோதாவிலுள்ளனவென்றும், மூன்றே மூன்று மாறுதல்கள் மட்டும் செய்யப்பட்டுள்ளனவென்றும் மந்திரி தோழர் மாதவமேனன் மூதற் கண் குறிப்பிட்டார். முதல் மாறுதல், இச்சட்டத்தின் ஆயுள் 1952-ம் ஆண்டுவரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது, 4 (ஏ) நிபந்தனை மாற்றப்பட்டுள்ளது. மூன்றாவது, பரோலில் விடுதலையாகும் காவலைதிகளுக்கென ஒரு தனி நிபந்தனை சேர்க்கப்பட்டுள்ளது.

மசோதாவின் மீது எதிர்கட்சித் தலைவர் டாக்டர் வி கே. ஜான் பேசுகையில் குறிப்பிட்ட சில பகுதிகளாவன:

இம்மசோதாவை 'பொறுக்குக் கமிட்டி' யொன்றிடம் விட வேண்டியது அவசியமாகும். மசோதாவில் சில புதிய நிபந்தனைகள் சேர்க்கப்பட்டுள்ளன; அவற்றையெல்லாம் 'பொறுக்குக் கமிட்டி' பார்வையிட வேண்டியது இன்றியமையாததாகும். இதைச் செய்ய சர்க்கார் ஏன் தயங்குகிறார்களென்பது எனக்குப் புரியவில்லை.

"1947-ல் இச்சட்டம் செய்யப்பட்ட போது, ஓராண்டு காலத்துக்கு மட்டுமே இது தற்காலிக ஏற்பாடென்று கூறப்பட்டது. ஆனால் அதன் ஆயுள் ஆண்டுதோறும் நீண்டுகொண்டே போகிறது. கொலை, கொள்ளை, நாசவேலை இன்ன பிற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகக் கூறப்படும் ஒரு பகுதி மக்களை அடக்கி நிறுத்த முடியவில்லை இன்றைய சர்க்காரால் என்பதற்கு இம்மசோதா ஒரு சான்றாக இருக்கிறது. சர்க்கார் எந்த அளவுக்குத் தன்னை அதிகாரபலத்தால் ஆயுதபாணியாக்கிக்கொள்ள விரும்புகிறது என்பதற்கும் இம்மசோதா தக்கதொரு எடுத்துக் காட்டாகும்.

"நாசவேலைகளை ஒழித்துக் கட்டிட்டுச் சர்க்கார், வேண்டா சென்று செல்லவில்லை, இம் மூன்றாண்டு காலமாய் சர்க்கார் என்ன செய்தார்களென்றுதான் கேட்கிறேன்.

"வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசிகளின் விஷம் போன்ற ஏற்றம் இன்ன பிறவே பெருவாரி மக்கள் கம்யூனிஸ்டுகளாக மாற ஏதுவாயின. பொருளாதார அதிருப்தி எங்கும் பரவியிருப்பதால் கம்யூனிஸ்டுகள் தங்கள் பிரசாரத்தை மக்களிடையே வெகு எளிதில் செய்துவருகின்றனர். பூமழுதலைக் குக்கொண்டிரா பட்டது. ஆனால் அதன் விளைவுகள் திருப்திகரமாக இருக்கக் காணோம். கள்ளச் சாராயம் காய்ச்சுவதும் அதிகரித்து வருகிறது."

இந்நிலையில் சபைத்தலைவர் குறுக்கிட்டு, மது விலக்குத் தோல்விக்கும் இம்மசோதாவுக்கும் தொடர்பென்ன வென்று விளக்கம் கேட்டார்.

டாக்டர் வி. கே. ஜான் குறிப்பிட்டதாவது: 'மாகாணத்தில் அதிருப்தி சூழ்நிலை பேற்பட்ட தற்கான பொதுவான காரணங்களையே குறிப்பிடுகிறேன். இக்காரணங்கள் வருவதற்கு சர்க்காரும் ஓரளவு பொறுப்பாளிகளாகத் தானிருந்தார்களென்பதையும் கூறவே இவற்றைத் தெரிவித்தேன். உற்பத்தியைப் பெருக்கவோ, மக்கள்நலம் பெருகவோ சர்க்கார் எதுவும் செய்யாத காரணத்தால்தான், கம்யூனிஸ்டுகள் நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொள்கின்றனர். கம்யூனிஸ்டுகளின் அத்தகைய ஆக்கவேலைகளைத் தடுக்கவே இம்மசோதா கொண்டுவரப்படுகிறது. ஆனால் இதில் புதிய நிபந்தனைகள் சிலவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றை 'பொறுக்குக் கமிட்டி' பார்வையிடவேண்டியது அவசியமாகும்.

'மசோதாவின் ஒரு நிபந்தனை தனி பொருளின் தனிப்பட்ட சுதந்திரத்தின் தலையிடுவதாயிருக்கிறது. இம்மசோதாவின் நிபந்தனையின் கீழ் குற்றமற்றவொருவன் சிறையில் தள்ளிப் பூட்டப்பட்டவனேயாகின், தனது வழக்கை ஆய்ந்து தீர்ப்புக் கூற மாற ஒரு கோர்ட்டை நெருங்க அவனுக்குஉரிமைவேண்டாமா? இப்புதிய நிபந்தனை [4 (ஏ)] சட்ட, நீதி மன்றங்கள் மீது சர்க்கார் சந்தேகப்படுகின்றன ரென்பதையே காட்டுகிறது.

"அடக்குமுறைச் சட்டமொன்றை சர்க்கார் கொண்டுவருகிறதென்றால் அது அச்சர்க்காரின் செல்வாக்கின்மையையே காட்டுகிறது."

டாக்டர் ஜான் தனது பேச்சு முடிவில், குற்றமற்ற நபர்களைக் காவலில் வைப்பது சட்ட விரோதமென்பதாகத் தீர்ப்பளித்து உயர் நீதி மன்றம் பற்பல காவற்கைதிகளை இதற்கு முன் விடுதலை செய்திருக்கிறதென்றும், இப்பொழுது அது போன்ற வழக்குகளை விசாரிக்க உயர் நீதி மன்றத்துக்கும் அதிகாரமிருக்காத வகையிலும், உயர்நீதி மன்றத்துக்கு இது விஷயமாயிருந்த அதிகார எல்லையை ரத்து செய்யும் வகையிலும் இம்மசோதாவினுள் நிபந்தனைகள் சில செய்யப்பட்டுள்ளனவென்றும் குறிப்பிட்டார்.

மேலும் பல உறுப்பினர்கள் மசோதா மீது பேச, மந்திரி மாதவமேனன் தனது மழுப்பல் பதில்களால் சமாதானங்கூற, மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு விடப்படாமலேயே நிறைவேற்றப்பட்டது.

உரம் தருவதாக உறுதி மொழி

சென்னை சர்க்காரின் 'உணவுப் பெருக்க உற்பத்தித் திட்டத்தின்கீழ் தேவைப்படும் போதுமான எரு (உரம்) ஆகிய அம்மோனியம் சல்பேட்டை மத்திய சர்க்கார் சென்னை சர்க்காருக்குத் தந்துதவும் என்று உறுதி மொழி யளித்துள்ளாராம் உணவு மந்திரி தோழர் தௌலத்ராம்.

காங்கிரஸும் ஆர். எஸ். எஸும்

ராஷ்ட்ரீய சுயம் சேவா சங்கத்தின் போக்கு வகுப்பு வெறியை அடிப்படையாகக் கொண்டதேயென்பதில் ஐயப்பாடே இல்லை. எனவே காங்கிரஸ் மனப்போக்கோடு அது ஒத்துவரவே வராது.

— பண்டித நேரு
புதுடெல்லி, நவ. 16—

சாம்பியன் ரீப்மைன்ஸ் கதவடைப்பு

1600 தொழிலாளர் அவதிப்படுகின்றனர்

கோலார் தங்கவயல், நவ. 17— அகில இந்திய பூராவும் தொழில் வருமான லாபத்தில் பங்கு வேண்டுமென கோரப்பட்டிருக்கிறது. அதன்படியே பல தொழிற்சாலையிலே 4½ மாத போனஸ் தொழிலாளிகளுக்கு கொடுக்கப்பட்டது. கடந்த ஒரு வருஷமாக தங்கவயல் தொழிலாளிகள் 2500 பேர்களுக்கும் லாபத்தில் பங்கு 6 மாத சம்பளம் போனஸாகக் கொடுக்கும்படி தொழிலாளர் கேட்டிருந்தனர். அதற்கு இதுவரையிலும் பதில் இல்லை. தொழில் மந்திரி தோழர் கே. டி. பாஷ்யம் ஐயங்கார் அவர்கள் கம்பெனியாருக்கு எந்த விதமான லாபமில்லை என்றும், எதிர்த்து சட்டப்படி கேட்டதிற்கு கடந்த 10.11.49 விருந்து சாம்பியன் ரீப் மைன்ஸ், மாரி குப்பம் மைன்ட்ஸ் கதவடைப்பு செய்து விட்டார்கள். இதனால் இரண்டு மைன்ஸ்களிலும் வேலை செய்யும் 1600 தொழிலாளர்கள் தவிக்கின்றனர் என்று சாம்பியன் ரீப்மைன்ஸ் தொழிலாளர் சங்கச்செயலாளர் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

20–11–49

ஆம்பூர் :—	இரா. நெடுஞ்செழியன், மா. இளஞ்செழியன்.
காஞ்சிபுரம் :—	சி. என். அண்ணாதுரை கே. ஏ. மதியழகன்.
கரூர் :—	ஈ. வெ. கி. சம்பத், டி. கே. சீனிவாசன், ஜி. பராங்குசம்.
திருவாரூர் :—	இரெ. இளம்வழுதி, காஞ்சி கல்யாணசுந்தரம்.
குமாரமங்கலம் :—	சி. பி. சிற்றரசு, ஜி. எஸ். இராஜு.
புதுக்கோட்டை :—	ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். எஸ். இளங்கோ.
சித்தோடு :—	எஸ். அப்பாவு, என். இ. பாலகுரு.

22–11–49

ஆலங்குடி :—	சி. பி. சிற்றரசு.

கண்திரையை . . .

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

யறைக்கு முன்னமேயே அத்தகைய சாவுமணி அடிக்கப்பட்டு விடுமென்ற உண்மையை அமெரிக்கா தெரிந்து கொண்டது.

அணுக்குண்டு உதவியோடு பிரிட்டனிலுள்ள 90 சூப்பர் கோட்டை விமானங்களையும் கொண்டு 19,000 சாதாரண பாம்பர்களுக்குச் சமமாக்கிக் கொள்ளலாமெனக் கனவு கண்டு கொண்டிருந்தன, ஐரோப்பிய வல்லரசுகள். அதில் மண் விழுந்தது கண்டு கலங்குகின்றன, பிதற்றுகின்றன. அலமருகின்றன.

சோவியத் ரஷ்யாவின் சமாதானத் திட்டங்களை நுணுக்க முறையில் ஆய்ந்து அபிப்பிராயங் கூறுவார் பிரிட்டிஷ் மந்திரியென எதிர்பார்க்கப்பட்டது. மெக்நெயில் உலக விஷயங்களனைத்தைப் பற்றியும் பேசினார்; சோவியத் திட்டங்கள் பற்றித் தொடவேயில்லை!

வெளிநாட்டு ஒலிபரப்பு நிகழ்ச்சிகளெல்லாம் ரஷ்யாவில் தடைசெய்யப்பட்டுவிடுகின்றன; சோவியத் மக்கள் செவியில் அவை விழக்கூடாதென்று கட்டுப்படுத்தப்படுகின்றனவென்று மெக்நெயில் குறிப்பிட்டிருக்கிறார்.

அதற்குப் பதில் தந்த தோழர் விஷின்ஸ்கி குறிப்பிட்டதாவது :

"அர்த்தமற்ற அக்குப்பைகளனைத்தையும் ரஷ்யாவில நடமிட அனுமதித்தால், விளைவு என்னவாயிருக்குமென்பதை தோழர் மெக்நெயில் உணர்வாரா? இத்தகைய குப்பைகள் எங்கள் மக்களிடையே தீராத ஆத்திரத்தையும் சீற்றத்தையுமே உண்டு பண்ணும். சோவியத் மக்கள் ஆத்திரத்தின் விளைவு மெக்நெயிலுக்கும் அவர் கும்பலுக்கும் கசப்பைத் தரத்தக்கதாகவே இருக்கும்."

என்று குறிப்பிட்டு, அயல் நாட்டு ஒலிபரப்பு சொற்பொழிவுகள் (குப்பைகள்), சோவியத் மக்களிடையே ஆங்கில-ஐரோப்பிய வல்லரசுகள் பற்றி ஆத்திரச்சூழ்நிலை ஏற்படாதிருக்கவேண்டியே தடை செய்யப்படுகின்றனவென்று தெளிவு படுத்தினார்.

'சோவியத் யூனியனைச்சுற்றியுள்ள தடுப்புக்கதவுகளைத் திறந்து விடுங்கள்' என்று மெக்நெயில் இலக்கண 'அணி' நயத்துடன் பேசியதற்கு சோவியத் மந்திரி விஷின்ஸ்கி குறிப்பிட்டதாவது: 'சோவியத் யூனியனின் கதவுகளும் சன்னல்களும் சுத்தமான தூய காற்றுக்கு என்றென்றும் திறந்தே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மேற்கெல்லையிலிருந்து எங்கள் மாட்டு வீசும் காற்று எத்தன்மையது ?"

பிரிட்டிஷ் மந்திரியின் சவாலை ஏற்றுக்கொண்டு, அருமையானமுறையில் அடித்து அறைகூவல் விடுத்துள்ளார் சோவியத் மந்திரி. ஏகாதிபத்திய முதலாளித்துவ உலகுக்கு தோழர் விஷின்ஸ்கியின் பேச்சு வரலாற்றுச் சிறப்புடைய எச்சரிக்கையேயாகும்.

கழக நடவடிக்கைகள்

கோவை :—கோவை மாவட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம், 6-11-49 அன்று காலை தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் முன்னிலையில், கோவை நகரக் கிளையின் கட்டிடத்தில் கூடியது. தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். மாவட்டத்திலுள்ள எல்லாக் கிளைகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். அப்போது, மலையான மாவட்டத்திலும், நீலகிரி மாவட்டத்திலும், பெருவாரியான கழகக் கிளைகள் ஏற்பட்டு, மாவட்டக் கழகம் முறைப்படி அமையும் வரை தற்போது அங்குள்ள கிளைகள் கோவை மாவட்டக் கழகத்துடன் இணைந்து வேலை செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. பின்பு ஒவ்வொரு தாலுக்காவிலுமுள்ள கிளைக் கழகங்களிலிருந்தும் தேர்ந்தெடுத்தனுப்பிய பிரதிநிதிகளான கீழ்க்கண்டவர்களை செயற்குழுவினராகத் தேர்ந்தெடுத்து, கோவை மாவட்ட தி. மு. கழகம் அமைக்கப்பட்டது.

ஈரோடு தாலுகா:— எஸ். ஆர். சந்தானம், எஸ். அப்பாவு, ஈ. வி. கே. சம்பத், என். இ. பாலகுரு, ஏ. சங்கரய்யா, டி. ஜி. கன்னியப்பன், குழந்தைசாமி.

பவானி தாலுகா:—ஆர். கே. பெருமாள், பி. டி. சாமிநாதன்.

பல்லடம் தாலுகா:—எஸ். ஆர். சுப்பிரமணியம், கே. சுப்பிரமணியம், பி. பொன்னுசாமி, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, எஸ். என். அற்புதசாமி, எஸ். கே. கருப்பண்ணன், எஸ். பி. ரங்கசாமி, எஸ். ஏ. மாணிக்கம், கே. ரங்கசாமி, எஸ். கே. வெங்கிடுபதி, நல்லசாமி, மாரிமுத்து.

கோபிதாலுகா:— ஜி. என். ராசு, எஸ். எம். கிட்டு.

பொள்ளாச்சி தாலுகா :— பி. என். இராமநாதம், கே. கிருஷ்ணசாமி, அ. ச. ராஜு, ஆ. சின்னசாமி, வி. கே. வேணுகோபால், சுந்தரம், ஜே. சுந்தரராசன், மயில்சாமி.

தாராபுரம் தாலுகா:—கே. ராஜகோபால், ஆர். துரைசாமி, மு. பழனிச்சாமி.

உடுமலை தாலுகா:— எம். எஸ். கனகராசன், ஆர். மீனாட்சிசுந்தரம், தி. வெங்கடாசலம், கே. முருகேசன், எம். உதுமான், முத்துசாமி, வீரப்பன்.

கோவைதாலுகா:—ஏ.பொன்னுசாமி, சி. சீனிவாசன், எம். பட்டிலிங்கம், சி. ஜே. கிருஷ்ணன், கே. சிவசாமி, எஸ். ஏ. ராசமாணிக்கம், பி. பாலசுந்திரம், ஆர். ராயப்பன், சி. வி. கோபால், எம். சாமியப்பன், ஆர். ஆதிசிவம், ஆர். சடையப்பன், கே. ஏ. பி. முத்து.

கள்ளிக்கோட்டை:— வி. நாராயணசாமி, செங்கமலம்.

நீலகிரி, உதகை:— எஸ். எம். சஞ்சீவி ராஜு.

குன்னூர்:—ஆர். சுப்பராயன், ப. முத்து. பின்பு தோழர்கள் பி. பழனிச்சாமி, உடுமலை கனகராசன், ஏ. பொன்னுசாமி, ஈ. வி. கே. சம்பத், பொள்ளாச்சி நடராசு, குளூர் எஸ். ஏ. மாணிக்கம், சி. என். அண்ணாதுரை ஆகியோர் கழக உறுப்பினர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைபற்றியும், கழக வேலைத் திட்டங்கள் பற்றியும் பேசினர். பிறகு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— பி. பழனிச்சாமி; துணைச்செயலாளர்கள்— எஸ். ஏ. இராஜமாணிக்கம்; எஸ். ஆர். சுப்பிரமணியம்; பொருள் உறுப்பினர்—ஏ. பொன்னுசாமி; விளம்பர உறுப்பினர்— எஸ். அப்பாவு; அமைப்பாளர்கள்—ஜி. என். ராசு, என். இ. பாலகுரு.

குறிப்பு:— தங்கள் தாலுகா வாரியாகத் தெரிவிக்காத உறுப்பினர்கள் தயது செய்து உடனடியாகத் தெரிவிக்கவும். எல்லாக் கிளைக் கழகங்களும் தங்கள் செயற்குழு விவரம், முகவரி இவைகளை மாவட்டக் கழகத்துக்கு அனுப்பவும். உறுப்பினர் சேர்க்கும் புத்தகத்துக்கும் மாவட்டக்கழகத்துக்கே எழுதவும். தாங்கள் எழுத வேண்டிய முகவரி :—எஸ். ஏ. இராசமாணிக்கம், செயலாளர், நகர திராவிட முன்னேற்றக் கழகம், சுக்கிரவாரப் பேட்டை, கோயம்புத்தூர். (வி-உ)

* * *

பொள்ளாச்சி:—இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் செயற்குழுக் கூட்டம் 28-10-49 அன்று, தோழர் தாமஸ் தலைமையில் கூடி, சில தீர்மானங்களை நிறைவேற்றியது.

* * *

பம்பாய் :—பம்பாய் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 6-11-49 அன்று, தோழர் எஸ். கே. கண்ணன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, டி கழகத்தின் திறப்பு விழாவை 1-1-50-ல் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. நிதி வசூல் செய்வதற்கும், உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும், கீழ்க்கண்ட தோழர்கள் டிவிஷன் வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கொலாபா :—கே. கே. ராமனுதன், ஜார்ச்கேட்:—டி. எஸ். விஸ்வநாதம, வாடன் ரோடு, மலபார் ஹில்:—எம். எஸ். கன்னையா, மதுங்காதார், மகிம்:— ராஜுசாமி, தாராவி:— எம். எல். செல்லையா, எம். வி. ராமையா. உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் மேற்கண்ட தோழர்களிடம் பதிவு செய்துகொள்ளவும். (வி-உ)

* * *

சென்னை, சூளை:— இக்கிளையின் செயற்குழுகூட்டம் 6-11-49 அன்று தோழர் வி. கே. வி. சாமி தலைமையில் நடைபெற்றது. அது போது, "திராவிட நாடு" இதழுக்குக் கேட்டிருந்த ஜாமீன் தொகையை ரத்து செய்யப்பட்டது குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டதோடு, இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு, நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

● ● ●

நாகர்கோவில்:—இந்நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 4-11-49-ல் தோழர் எஸ். உத்தண்டன் தலைமையில் கூடியது. அதுபோது, வி. சுப்பிரமணியம், ச. வன்னியபெருமாள், ஆர். சித்தாஞ்சன் தாஸ், மு. வேலாயுதம், வை. கருப்டினன், ஏ. நாராயணன் ஆகியோர் செயற்குழுவில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பின்பு, துவக்க விழாவின் வரவு செலவுக்கணக்கு பார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டது. மீண்டும் 11—11—49ல் கூடிய செயற்குழுக் கூட்டத்தில், தி. மு. கழகத் தலைமை நிலையத்திலிருந்து வந்த கடிதம் படித்துக் காண்பிக்கப்பட்டது. பிறகு, திருவதாங்கூரில் நாஞ்சில நாட்டையும், அதைச்சார்ந்த தமிழ்ப்பகுதிகளையும் ஒரு தனி மாவட்டமாக்கி, அதைத்தலைமைக் கழகத்தோடு இணைத்தமைக்கு தலைமைக் கழகத்துக்கு நன்றி தெரிவித்து ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேதபடியாக, நாஞ்சில் மாவட்ட உறுப்பினராக தி.மு. தலைமைக்கழகத்திற்குத் தோழர் வி. எம். ஜான் தேர்ந்தெடுக்கப்பட்டார். (துணைச்செயலாளர்)

* * *

சென்னை, புளியந்தோப்பு:— சென்னை புளியந்தோப்பு (18-வது வட்டம்) தி. மு. கழகச் செயற்குழுக்கூட்டம் 30-10-49-ல் கூடி, கீழ்க்கண்டவர்களை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத்தேர்ந்தெடுத்தது.

1. ம. து. நித்தியானந்தம், 2. எம். எஸ். கோவிந்தராசன்.

* * *

சென்னை கோடம்பாக்கம்:- இவ்வூர் கிளையின் செயற்குழுக் கூட்டம் 13-11-49-ல்கூடியது. அதுபோது மாவட்டக் கழத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் மு இளையபெருமாள் பி.ஏ., சிவகோசை ஆகியோரும், விளம்பர உறுப்பினராகத் தோழர் மா. செங்குட்டுவனும், துணைச் செயலாளராகத் தோழர் மகாதேவனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (வி-உ)

* * *

சென்னை, எழு கிணறு:—இக்கிளையின் செயற்குழுக் கூட்டம், 13-11-49ல் கூடி, மாவட்டக்கழகத்திற்குப்பிரதி நிதிகளாக தோழர்கள் ஏ. எஸ். ராமன், சே. தேவசகாயம் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தது. (வி-உ)

● ● ●

கடம்பூர்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக்கூட்டம் 13-11-49 அன்று தோழர் மு. பொன்னுசாமி தலைமையில் கூடி, பல தீர்மானங்களை நிறைவேற்றியது.

● ● ●

திண்டுக்கல்:— இந்நகர தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 13-11-49-ல் தோழர் எஸ். எம். டி. ராஜா அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது, துவக்க விழாவின் வரவு செலவுக் கணக்கு பார்க்கப்பட்டு, ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்பு மதுரை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் பி. ராஜா, என். முத்து ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிறகு, சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது முடிவுற்றது. (செ-ர்)

● ● ●

திருவானைக்காவல்:—சீரங்கம்—திருவானைக்காவல் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 13—11—49ல் தோழர் ஆர். செந்தாமரைக் கண்ணன் அவர்கள் தலைமையில் கூடியது. அது போது, திருச்சி மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் வி. சீனிவாசன், எஸ். மருதநாயகம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி. உ.)

* * *

சுண்டக்காமுத்தூர்: — இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 14—11—49ல்கூடியது. அதுபோது, கோவை நகர தி.மு.க. கிளைக்கும் மாவட்டக் கழகத்திற்கும் பிரதிநிதிகளாகத் தோழர்கள் ம. ராமனன், சு. ரா. ராமசாமி ஆகியோர் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலுமொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

பொட்டல் புதூர்:— இவ்வூர் கிளையின் செயற்குழுவில் கே. என். மகம்மதுமைதீனுக்குப் பதிலாக கே. என். காதர்மைதீன் என்று (வெளியூர் 28-10-49 மாலைமணியில்) பிரசுரிக்கப்பட்டிருப்பதைத் திருத்தி வாசித்துக்கொள்ளவும். (ஆ—ர்)

தோழியர் சத்தியவாணிமுத்து வானொலிப் பேச்சு

21-11-49 திங்கட்கிழமை பிற்பகல் 1-மணிக்கு, மாதர் நிகழ்ச்சியில் கீழ்சென்னை ரேடியோவில தோழியர் சத்தியவாணிமுத்து "ஓய்ந்த நேரத்தில் விளையாட்டுகள்" என்பது பற்றிப் பேசுகிறார்கள்.

திருச்சி மாவட்ட தோழர்களுக்கு

உறுப்பினர் சேர்க்கும் ரசீது புத்தகம் வாங்கிச் சென்ற கிளைக் கழகத் தோழர்கள் உடனே மத்திய கழகத்திற்குச் சேரவேண்டியபகுதியையும், தொகையையும் உடனே அனுப்பி வைத்துவிட்டு மாவட்டக் கழகத்திற்குச் சேரவேண்டிய சீட்டை எனது விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். முதல் பகுதியைச்சேர்த்து அனுப்பிய பிறகு தான் இரண்டாம் முறை புத்தகம் அனுப்ப முடியும்.

திருச்சி மாவட்ட மாநாடு டிசம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் நடப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகிறது. ஆகையால் அதற்குள் நம்மாவட்டத்தில் இன்னும் கிளைக் கழகங்கள் அமைக்காத இடங்களில் கழகங்கள் அமைப்பது, அதிகப்படியான அங்கத்தினர்களைச் சேர்ப்பது, துவக்க விழாப்பொதுக் கூட்டங்கள் போடுவது போன்ற காரியங்களை மிகத் துரிதமாகச் செய்து மற்ற மாவட்டங்களைவிட மிக முன்னிலையில் இருக்கச் செய்வேண்டுகிறேன்.

ஜி. பராங்குசம்
அமைப்புக்குழு உறுப்பினர்
என். எஸ். பங்களா,
தெப்பகுளம் போஸ்ட்,
திருச்சிணுப்பள்ளி.

பொழுது போக்கு

தமிழ் — நாடகம்

ஒற்றைவாடை — இமயத்தில் நாம்

தமிழ்—சினிமா

பிரபாத்	— அபூர்வ சகோதரர்கள்
வெல்லிங்டன்	— ,,
சித்ரா	— மங்கையர்க்கரசி
மகாராணி	— அரிதாஸ்
சரஸ்வதி	— அசோக்குமார்
சயானி	— கண்ணகி
சன்	— மாயக் குதிரை
கிரௌன்	— ,,
பாரகன்	— லைலா-மஜ்னு

ஆங்கிலம்

Kapali	— Spy Smasher
Casino	— So Dear to my Heart
Midland	— Command Decision
Minerva	— Blood and Sand
New Globe	— Cary Grant
New Elphinstone	—Night unto Night
Roxy	— Fiesta

இந்தி

பிராட்வே	— சகுந்தலை
சாகர்	— சோட்டா பாய்
கெயிட்டி	— லாட்லி
செலக்ட்	— மீர்வால்
ஸ்டார்	— யத்தீம்

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களிலும், அனுப்பும் மணியார்டர்களிலும் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சந்தா எண் குறிக்காமல் எழுதினால் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர், 'மாலைமணி'

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.